






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.2.2024) தலைமைச் செயலகத்தில், ஜாக்டோ – ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மு. அன்பரசு, கு. தியாகராஜன், மு. வெங்கடேசன், நேரு, தியோடர் ராபின்சன், இரா.தாஸ், பொன்னிவளவன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர். பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் உடனிருந்தனர்.

## பாசிசம் வீழட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்! இந்தியா வெல்லட்டும்!

# தமிழ்நாட்டு மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு அமையப் பெற்றுள்ளது ஆளுநர் உரை!

## சட்டப்பேரவையில் - ஆர்.இராஜேந்திரன் பேச்சு!

**சென்னை, பிப்.16 - சட்டப்பேரவையில், ஆளுநர் உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய கழக உறுப்பினர் ஆர்.இராஜேந்திரன். "தமிழ்நாட்டு மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு அமையப் பெற்றுள்ளது ஆளுநர் அறிக்கை!" என்று குறிப்பிட்டார்.**

**சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது :**

எனக்கு தாயாகவும், தந்தையாகவும், எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகவும், என்னை சேய் போல் அரவணைத்து காத்து வழிநடத்துகிற இந்திய துணைக் கண்டமே பாராட்டும் எங்கள் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த காலத்திலே பல்வேறு ஆளுநர் உரைகள் இந்த அவைக்கு அளிக்கப்பட்டிருந்தாலும்கூட, நாடாளுமன்றத் தேர்தலை எதிர்நோக்கியுள்ள இந்நிலையில் "யானைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே" என்பதுபோல, நேற்றைய தினம் அவைக்கு வழங்கப்பட்ட ஆளுநர் உரை என்பது தமிழ்நாடு அரசின் திட்டங்களையும், குறிக்கோள்களையும், இலட்சியங்களையும் வெளிப்படுத்தும் நிறைவுகோலாக அமைந்துள்ளது பாராட்டுதலுக்குரியது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலும், தலைவர் கலைஞர் அவர்கள் காலத்திலும், நம் உயிரனைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களாலும் இந்திய மக்களுக்கு ஏற்படும் சங்கடங்கள், துன்பங்கள், இடர்ப்பாடுகள், இன்னல்கள் என அனைத்தையும் களைவதற்கு துணை நிற்கிற மாபெரும் இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் என்றும் செயல்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசின் பல்வேறு நிதிப் பகிர்வுகளில் தமிழ்நாடு மாநிலத்தை ஒன்றிய மோடி அரசு வஞ்சித்தாலும் முதலமைச்சர் அவர்களின் தலைமையில், அயராத முயற்சியின் விளைவாக குறிப்பிடத் தக்க பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு கண்டுள்ளது.

மின்னணு உற்பத்தியில் 2021-2022 ஆம் ஆண்டில் நான்காம் இடத்தில் இருந்த தமிழ்நாடு, 2022-2023 ஆம் ஆண்டில் மகாராஷ்டிரா, கர்நாடகா, குஜராத் ஆகிய மாநிலங்களை யெல்லாம் விஞ்சி நாட்டிலேயே முதல் மாநிலமாகத் திகழ முதலமைச்சர் அவர்களே காரணம். (மணியடிக்கப் பெற்றது)

மாற்றாந்தாய் மனப்பான்மையோடு செயல்படும் ஒன்றிய அரசு உதவிட முன்வரவில்லை என்றாலும்,

மக்களின் துயர்நீக்கும் பொட்டு, முதலமைச்சர் அவர்கள் சென்னை மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் சேதமடைந்த பகுதிகளில் பாதிக்கப்பட்ட 45 இலட்சத்து 19 ஆயிரம் குடும்பங்களுக்கு 2,022 கோடி ரூபாய் வழங்குவதற்கு உத்தரவிட்டார்கள். நிதி இல்லாத நிலையிலும் அள்ளிக்கொடுத்த முதலமைச்சர் நீங்கள்.

**உலக முதலீட்டாளர்கள் மாநாடு;** இம்மாநாட்டில் சுமார் 15 லட்சம் நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ரூபாய் 6.64 லட்சம் கோடி முதலீடு செய்வதற்கு 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. முதலமைச்சர் அவர்களால் "1 trillion dollar டாலர் தமிழ்நாடு பொருளாதாரம் குறித்த தொலைநோக்கு ஆவணம்" வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டை இந்திய நாட்டின் முன்னணி விளையாட்டு மையமாகவும், சர்வதேச Chess Olympiad மற்றும் Khelo India - இளைஞர் விளையாட்டு போட்டிகள் போன்ற மகத்தான விளையாட்டு நிகழ்வுகளை சிறப்பாக நடத்தியதன்மூலம் விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு மாபெரும் வெற்றியைக் கண்டுள்ளது. பொருளாதார மேதை

அமர்த்தியாசென் அவர்கள் முன்பு குறிப்பிட்டதைப் போல, பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றம் ஆகிய இரண்டிலும் குறிப்பிடத்தக்க சாதனையை தமிழ்நாடு அரசு அடைந்துள்ளது என்பது பாராட்டத்தக்கது.

சரக்கு மற்றும் சேவை வரி நடைமுறைப்படுத்தப்பட்டதை தொடர்ந்து, மாநிலங்களில் நிதி ஆதாரம் திரட்டும் திறனும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஒன்றிய அரசு 30.6.2022 முதல் சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு முறையை நிறுத்தி யதன் விளைவாக ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசுக்கு 20,000 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

ஒன்றிய அரசுக்கு வரியாக தமிழ்நாடு 1 ரூபாய் கொடுத்தால் ஒன்றிய அரசு 29 பைசா வைத்தான் தமிழகத்திற்கு தருகிறது. ஆனால், பாரதிய ஜனதா கட்சி ஆட்சி செய்யும், மத்திய பிரதேசம் வரித் தொகையாக 1 ரூபாயை



ஒன்றிய அரசுக்கு கொடுத்தால், ஒன்றிய அரசு மத்திய பிரதேச மாநிலத்திற்கு 2 ரூபாய் 17 காசுகள் வழங்குகிறது. இந்த வேறுபாடு ஏன்? இந்த பாரபட்சம் ஏன்?

**மெட்ரோ ரயில் திட்டம்;** குஜராத் மாநில மெட்ரோ ரயில் திட்டத் திற்கு ரூபாய் 12,867 கோடி வழங்கப்பட்டிருக்கிறது. உத்திரப்பிரதேச மாநில மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ரூபாய் 11,565 கோடி வழங்கப்பட்டிருக்கிறது. மத்தியபிரதேச மெட்ரோ ரயில் திட்டத்திற்கு

ரூபாய் 3,779 கோடியை ஒதுக்கியுள்ள ஒன்றிய அரசு, தமிழ்நாட்டில் இயங்கிவரும் சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு இந்த ஆறு ஆண்டுகளில் வெறும் ரூபாய் 3,273 கோடியை மட்டுமே இதுவரை ஒதுக்கியுள்ளது. மேலும், 2023-2024 ஆம் நிதியாண்டுகளில் ஒன்றிய அரசு ஒரு ரூபாய் நிதியைக் கூட ஒதுக்கவில்லை. அதைப்போலவே 5.12.2023 வரை ஒரு ரூபாயைக் கூட (குறுக்கீடு)...

ஒதுக்கவே இல்லை. தமிழ்நாட்டில் மொத்தம் 54 கிலோமீட்டர் தூரத்திற்கு மெட்ரோ ரயில் பாதை (குறுக்கீடு). . .

அதைப்போல 5.12.2023 வரை ஒரு ரூபாயைக் கூட ஒதுக்கவே இல்லை. தமிழ்நாட்டில் மொத்தம் 54 கிலோமீட்டர் தூரத்திற்கு மெட்ரோ ரயில்பாதை இயங்கி வருகிறது. அதற்கு ஒன்றிய அரசு 6 ஆண்டுகளில் (மணியடிக்கப்பெற்றது) 3,273 கோடி ரூபாயை மட்டும் வழங்கியிருக்கிறது. ஆனால், அதே நிதியாண்டில் குஜராத் மாநில மெட்ரோ ரயில் திட்ட த்திற்கு ஒன்றிய அரசு அளித்துள்ள நிதி 12,867 கோடி ரூபாய். தமிழ்நாட்டின் மெட்ரோ ரயில் பாதை மொத்த நீளம் 54 கிலோ மீட்டர். குஜராத்தில் மெட்ரோ ரயில்பாதை மொத்த நீளம் வெறும் 39 கிலோ மீ ட்டர்தான். அதைவிட குறைவான நீளமுள்ள உத்திரபிரதேச மெட்ரோ ரயில் திட்டத்திற்கு மத்திய அரசு ரூபாய் 11,565 கோடியை வாரிக் கொடுத்துள்ளது. இதைவிட ஒன்றிய பாரதிய ஜனதா அரசின் பாரபட்ச நடவடிக் கைக்கு வேறு என்ன சான்று வேண்டும்.

**முதல்வரின் முகவரி; மக்களுடன் முதல்வர்;** ஆகிய இந்தத் திட்டங்களில் இதுவரை 22 இலட்சத்து 9 ஆயிரம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு மக்கள் மனநிறைவுடன் உள்ளனர். அதைப்போல, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இத்திட்டத்தின் வாயிலாக 1 கோடியே 15 லட்சம் மகளிர் பயன் பெற்றுள்ளனர். அவர்களின் பொருளாதார நிலை இதன்மூலம் உயர்ந்திருக்கிறது. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு புதுமைப் பெண் திட்டத்திலே அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவிகள் கல்லூரிகளில் சேரும்போது அவர்களுடைய எண்ணிக்கை இந்த இரண்டரை யாண்டு காலத்தில் 34 சதவிகிதம் அளவிற்கு உயர்ந்துள்ளது. இதன்வாயிலாக பெண்கள் உயர்கல்வி பெறுகிற அரிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

**மகளிர் விடியல் பயணத் திட்டம்;** பேருந்து பயணங்களில் பெண்களின் பங்கு 40 சதவிகிதத்திலிருந்து 65 சதவிகிதமாக உயர்ந்து பெண்கள் பொருளாதாரரீதியாக முன்னேறிட வழி பிறந்துள்ளது. மகளிர் சுய உதவிக் குழுவினை அன்று தருமபுரியில் தலைவர் கலைஞர் அவர்கள் தொடங்கினார்கள். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அன்று துணை முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்த முதலமைச்சர் அவர்கள் நின்று கொண்டே சுழல் நிதி வழங்கி கின்னஸ் சாதனை படைத்தார்கள். தற்போது 3 இலட்சத்து 20 ஆயிரம் குடும்பங்கள் 27,539 சுய உதவிக் குழுக்களுக்கு 30 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட் டுள்ளது.

இந்திய வரலாற்றில், 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' ஒரு மகத்தான முன்னோடித் திட்டமாகும். 30,992 அரசு தொடக்கப் பள்ளிகளில் 16 இலட்சத்து 85 ஆயிரம் மாணவர்கள் பயனடையும் விதத்தில் இத்திட்டம் விரிவுபடுத்த ப்பட்டுள்ளது. இந்த அற்புதமான திட்டத்தை தெலங்கானா அரசும் பின்பற்றியுள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தமிழ்நாடு மேம்பாட்டு செயல் திட்டம், 2024; (மணியடிக்கப்பெற்றது)

அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்; 200 ரூபாய் கோடி மதிப்பீட்டில் குடிநீர் வசதி, மின் வசதி, சாலை வசதி, பூங்காக்கள் மற்றும் நூலகங்கள் உள்ளிட்ட பொதுப்பயன்பாட்டு வசதிகளுக்காக ஒதுக்கீடு என்பது பாராட்டுதலுக்குரியது. அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்; 2023-2024 ஆம் ஆண்டில் பயனாளிகளுக்கு ரூ.84 கோடி மானியம் வழங்கப்பட்டிருக்கிறது.

ஸ்டார்ட் அப் இந்தியா 2022 தரவரிசையில், நம் மாநிலம் 'சிறந்த செயலாற்றும் மாநிலம்' ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இது முதலமைச்சர் அவர்களின் அயராத முயற்சிக்கும், உழைப்பிற்கும் கிடைத்த வெற்றி யாகும். அரசு தமிழ்நாடு இணைவழி தற்சார்பு தொழிலாளர்கள் நல வாரியத்தை தொடங்கியுள்ளது. உணவு விநியோகம், வாடகைப் பயணம் போன்ற இணையவழி அடிப்படையிலான ஒருங்கிணைப்பு தளங்கள் மூலமாகப் பணியாற்றும் 1 இலட்சத்திற்கும் அதிகமான அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனை இந்த வாரியம் பாதுகாக்கும் என்பதன் வாயிலாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொழிலாளர்களின் தோழனாக விளங்குகி றார்கள்.

நகர்ப்புற மக்களின் எதிர்பார்ப்புகளைநிறைவேற்றும் வகையில், 21,156 கோடி ரூபாய் செலவில் 261 குடிநீர் வழங்கல் திட்டங்களை அரசு அனுமதித்துள்ளது. நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்ட த்தின்கீழ், அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் 19,766 சாலைப் பணிகளுக்காக 1,564 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

'மக்களைத் தேடி மருத்துவம்', 'இன்னுயிர் காப்போம்; நம்மை காக்கும் 48 திட்டம்', 'இல்லம் தேடி கல்வித் திட்டம்', 'எண்ணும் எழுத்தும் திட்டம்', 'அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்II', 'முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்', என தமிழ்நாட்டு மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு அமையப்பெற்ற ஆளுநர் உரை. வரவிருக்கிற நிதி நிலை அறிக்கைக்கு மு ன்னோட்டமாக அமையப் பெற்றுள்ளது பாராட்டுதலுக்குரியது.

நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட ஆளுநர் உரை குறித்து *The Hindu* நாளிதழ் குறிப்பிட்ட போது, "*Governor's address delivered by speaker flays Centre on GST, CMRL*" என்று பாராட்டியிருக்கிறது. *Deccan Chronicle* நாளிதழ் குறிப்பிடு கிறபோது, "*Tamil Nadu is a powerhouse of economic growth*" என்று பாராட்டியிருக்கிறது.

பல்வேறு நலத் திட்டங்களும், நல அம்சங்களும் பெற்றிருக்கிற இந்த ஆளுநர் உரையை பாராட்டி, நன்றி கூறி, "உரிமைகளை மீட்க தலைவரின் குரல்", பாசிசம் வீழட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்! இந்தியா வெல்லட்டும்! நன்றி, வணக்கம்! (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு ஆர்.இராஜேந்திரன் பேசினார்.

## தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

# மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா அறிவிப்பு!

தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 20-2-2024 செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாயத் தொழிலாளர் அணித் தலைவர் உ.மதிவாணன் தலைமையில் நடைபெற உள்ளது.

இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி - இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள்.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : 1. தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா, 2. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் பணி - குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 14.2.2024

**அன்னியூர் சிவா**
செயலாளர்
தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

## உரிமையியல் நீதிபதி பணிக்கான தேர்வில்

# ஜவ்வாது மலை திருமதி ஸ்ரீபதி வெற்றி!

## அமைச்சர் எ.வ.வேலு வாழ்த்து!




**கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.** - திருக்குறள் 400

என்ற அய்யன் திருவள்ளுவரின் வாக்கிற்கேற்ப, "அழிவில்லாத சிறந்த செல்வம், கல்விச் செல்வமே" என்பது புலனாகிறது. அத்தகைய கல்விச் செல்வத்தை, தமிழ் வழியில் படித்தவர்களுக்கு, அரசுப் பணிகளில் முன்னுரிமை என, "முத்தமிழறிஞர் கலைஞர்" பிறப்பித்த ஆணையின் வழியே படித்து, எனது திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஜவ்வாது மலையில், மலைவாழ் மக்கள் வசிக்கும் புலியூர் என்ற கிராமத்தில் வசிக்கும், திருமதி ஸ்ரீபதி வழக்கறிஞர் பட்டம் பெற்றுள்ளார். மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய உரிமையியல் நீதிபதி பணிக்கான தேர்வில், வெற்றிப் பெற்று, "உரிமையியல் நீதிபதியாக" பதவி வகிக்க உள்ளதை அறிந்து, வாழ்த்தி, மகிழ்கிறேன்.

தந்தைப் பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் கட்டி காத்து வரும் சமூகநீதியின் வெற்றியைக் கண்டு பெருமைப்படுகிறேன். உங்களது வெற்றிக்கு உறுதுணையாக நின்ற, குடும்பத்தினருக்கு என்னுடைய மனமார்ந்தப் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அமைச்சர் எ.வ.வேலு**
செயலாளர் - திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க.

# நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு தஞ்சை வருகை!

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!





புதுக்கோட்டை, பிப். 16 - தி.மு.க நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு இன்று (16.02. 2024-வெள்ளிக்கிழமை) வருகை தருவதால் பொது நலனில் அக்கறை கொண்ட பல்வேறு தரப்பட்ட தொழில் முனைவோர்கள், வர்த்தகர்கள், வியாபாரிகள், சமூக ஆர்வலர்கள் கலந்து கொள்ள மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் எஸ்.ரகுபதி, கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

2024-ல் நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்காக தி.மு.க. சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக தி.மு. கழக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில், குழு உறுப்பினர்கள் கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன். சொத்து பாதுகாப்பு குழு செயலாளர், அமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன், தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, வர்த்தக அணி துணைத் தலைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ, மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.ராஜேஷ்குமார், மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ, அயலக அணிச் செயலாளர் எம்.எம். அப்துல்லா எம்.பி, மருத்துவர் அணி செயலாளர் டாக்டர்.எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., சென்னை மேயர் ப்ரியா ஆகியோர் உள்ளனர்.

இந்த தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் தமிழ் நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் நேரில் சென்று பல்வேறு தரப்பட்ட மக்களைச் சந்தித்து தேர்தல் அறிக்கையில் இடம் பெற வேண்டிய திட்டங்கள் குறித்து கோரிக்கை மனுக்களை பெற உள்ளனர்.

அதன்படி தஞ்சைக்கு இன்று (16.02.2024-வெள்ளிக்கிழமை) காலை 10மணி அளவில் தஞ்சை நாகை சாலையில் உள்ள குருதையாள் சர்மா திருமண மண்டபத்தில் பல்வேறு தரப்பினரை சந்தித்து தேர்தல் அறிக்கையில் இடம் பெற வேண்டிய திட்டங்கள் குறித்து கோரிக்கை மனுக்களை பெற உள்ளனர். அது சமயம் புதுக்கோட்டை மாவட்ட வளர்ச்சியில் அக்கறை கொண்ட பல்வேறு தரப்பட்ட தொழில் முனைவோர்கள், வர்த்தகர்கள், வியாபாரிகள், விவசாயிகள், மருத்துவர்கள், மீனவர்கள், மாணவர் சங்கங்கள், தொழிலாளர் நல பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், மாணவர்கள், தொண்டு நிறுவனங்கள், ஒன்றிய அரசின் துறைகளின் வளர்ச்சியில் ஆர்வம் உள்ள சமூக ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்கள், பொதுமக்கள், கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டு, தங்களது கருத்துக்களை மனுக்களாக வழங்கிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு தங்களது அறிக்கையில் கூறியுள்ளனர்.

